<u>IN THE COURT OF SUBORDINATE JUDGE, SANKARI</u>

**OS.No**.141/2018 **Date**: 20.11.2023

**PW**2-பாலகிருஷ்ணன்

<u>சாட்சி மீண்டும் முன்னிலையானதன் பேரில் 1 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

எனக்கு சாட்சி சம்மன் வரவில்லை. வாதியும், வாதியின் மகனும் கேட்டுகொண்டதால் சாட்சி சொல்ல வந்தேன். பிரதிவாதிகளை தெரியும். எனக்கு தாவா பரிகாரம் பற்றியும், ச.எண் பற்றியும் தெரியாது. ராமசாமி கவுண்டர் அப்பா குமாரசாமி கவுண்டருக்கு தாவா சொத்து எப்படி வந்தது என்று எனக்கு தெரியாது. தாவா சொத்தின் மொத்த விஸ்தீரணம் எனக்கு தெரியாது. தாவா சொத்து எத்தனை அயிட்டம் என்று எனக்கு தெரியாது. தாவா சொத்தின் ஐக்குபந்தி தெரியாது. குமாரசாமி கவுண்டர், எப்போது இறந்தார் என்று தெரியாது. ராமசாமி கவுண்டர் இறந்து 30 ஆண்டுகள் இருக்கும். செல்லமுத்து கவுண்டர் இறந்து 32 ஆண்டுகள் இருக்கும். வாதிக்கு திருமணம் ஆகி சுமார் 50 ஆண்டுகள் இருக்கும். வாதி மற்றும் பிரதிவாதிகள் வெள்ளாள கவுண்டர் சமுதாயம் என்றால் சரிதான். அவர்கள் அனைவரும் நாகிசெட்டிபட்டியில் கவுண்டர் காலனியில் குடியிருக்கிறார்கள் என்றால் சரிதான். நான் நாயுடு சமூகத்தை சேர்ந்தவர் என்றால் சரிதான். பஞ்சாயத்து பெருமாள் கோவிலில் பேசினார்கள். அந்த பஞ்சாயத்து பற்றி எனக்கு தெரியாது. அது பற்றி தெரியும் என்று முதல் விசாரணையில் சொல்லி இருந்தால் அது தவறு. 5ம் பிரதிவாதி தனியாக பாக பிரிவினை செய்த நிலத்தை விவசாயம் செய்து வருகிறார். அதே போல் செல்லமுத்து குடும்பமும் சொத்தை பாகம் பிரித்து தனியாக ஓட்டி வருகிறார்கள் என்றால் சரிதான். பிரதிவாதிகள் தங்களது சொத்தை 21.01.2009ல் பாகம் பிரிவினை செய்து கொண்டார்கள் என்றால் எனக்கு தெரியாது. மேற்படி பாகம் பிரிவினை பற்றி எனக்கு தெரியும் என்றாலும் வழக்குக்காக தெரியாது என பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. வாதி ஓட்டி வந்த நிலங்களின் ச.எண் தெரியாது. நான் சொல்வது போல் வாதி எந்த நிலமும் தனியாக ஓட்டியது இல்லை என்றால் சரியல்ல. அவர் திருமணம் சமயத்தில் 61 ஆண்டுகளுக்கு முன்பே தன்னுடைய பாகத்தை வாய்மொழியாக விடுதலை செய்து கொடுத்துவிட்டார் என்றால் சரியல்ல. அவருக்கு அனைத்து சீர்வரிசைகளும் செய்யப்பட்டுவிட்டது என்றால் சரியல்ல.1 முதல் 3 பிரதிவாதிகள் மற்றும் வாதியின் மகன் பெரியசாமி சேர்ந்து பேட்டரி தயாரிக்கும் நிறுவனம் ஆரம்பித்து நடத்தினார்கள் என்றால் சரிதான். அந்த நிறுவனத்தில் நஷ்டமாகிவிட்டதால் பெரியசாமி விலகிவிட்டார் என்றால் சரியல்ல. 1 முதல் 3 பிரதிவாதிகள் தான் அவரை வெளியேற்றிவிட்டார்கள். பிரதிவாதிகள் அவரை வெளியேற்றியதாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. நஷ்டமாகி

வெளியேறியதன் காழ்புணர்ச்சியால் தான் இத்தாவாவை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. வாதிக்கு சீர்வரிசை செய்த விவரங்கள் அனைவருக்கும் தெரிந்ததால் தான் உறவினர்கள் சாட்சியம் அளிக்க வரவில்லை என்பதால் தான் நான் வந்தேன் என்றால் சரியல்ல. பெரியசாமி சொல்லி கொடுத்து வாதிக்கு ஆதரவாக பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்தை பற்றி எனக்கு எதுவும் தெரியாது என்றால் சரியல்ல.

5 ம் பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

தாவா சொத்து ஆதியில் யாருக்கு பாத்தியப்பட்டது என்று எனக்கு தெரியாது. தாவா சொத்தின் ச.எண்கள் எனக்கு தெரியாது. விஸ்தீரணம் சுமார் 12 ஏக்கர். வாதியின் வயது தற்போது சுமார் 65 இருக்கும். வாதி தன்னுடைய சாட்சியில் 72 என சொல்லியிருந்தால் அது சரிதான். வாதிக்கு திருமணம் ஆகும் போது வயது சுமார் 25 இருக்கும். வாதியை நாகிசெட்டிபட்டியில் திருமணம் செய்து கொடுத்தார்கள். வாதியின் கணவர் அத்தியண்ணகவுண்டருக்கு சொந்தமாக நிலம் உள்ளது. அவர் திருமணம் ஆனது முதல் கணவன் மற்றும் மகனுடன் சேர்ந்து வாழ்ந்து வருகிறார். வாதியின் தகப்பனார் பெயர் ராமசாமி. அவர் இறந்து சுமார் 32 ஆண்டுகள் இருக்கும். அவர் இறந்த பின்னிட்டு வாதி தாவா சொத்தை பாகம் பிரித்து கொடுக்கும்படி கேட்கவில்லை என்றால் சரியல்ல. 2018 ல் தான் கேட்டார் என்றால் சரிதான். அது வரை அவர் காடு ஓட்டி கொண்டு வந்தார். வாதி ஓட்டி வந்த நிலத்தின் ச.எண் தெரியாது. அதற்கான வருவாய் ஆவணங்களை நான் பார்த்தது இல்லை. தாவா சொத்தில் வாதி ஓட்டிய நிலத்திற்கு அவர் பெயரில் வருவாய் ஆவணங்கள் ஏற்பட்டதா என்றால் எனக்கு தெரியாது. வாதியின் தாத்தா குமரப்பகவுண்டர் இறந்த பிறகு ராமசாமி கவுண்டரும், பொன்னாகவுண்டரும் வாய்மொழியாக பாக பிரிவினை செய்து கொண்டார்கள் என்றாலும், அதை அனுசரித்து 19.08.2019 அன்று ஒரு பதிவு செய்த பாக பிரிவினை பத்திரம் எழுதி கொண்டார்கள் என்றாலும் சரியல்ல. நான் ஊர் பஞ்சாயத்து தலைவர் இல்லை என்றால் பஞ்சாயத்துக்கு அழைத்தால் செல்வேன். ஊரில் ஜாதிக்கு ஒரு பஞ்சாயத்து தலைவர் உண்டு என்றால் சரியல்ல. அனைவருக்கும் பொதுவில் தான் பஞ்சாயத்து நடக்கும். பஞ்சாயத்து பற்றி எனக்கு நேரடையாக எதுவும் தெரியாது. நான் சொல்வது போல் பஞ்சாயத்து நடைபெறவில்லை என்றால் சரியல்ல. வாதி தாவா சொத்தில் தனியாக அனுபவத்தில் உள்ளார் என்று சொல்வது பொய் என்றால் சரியல்ல. வாதி சொல்லி கொடுத்து பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல. முதல் விசாரணை விவரங்கள் எனக்கு தெரியாது என்றால் சரியல்ல.

Sd/-பாலகிருஷ்ணன்

Sd/-திரு.ந.பன்னீர்செல்வம்,
சார்பு நீதிபதி, சங்ககிரி.